சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**<u>ஆணை நாள் 13.04.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**<u>வழக்கு எண். SA 8512/E/2024</u>**

திரு.A.சிக்கந்தர் பாஷா -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்), பொது அதிகார அமைப்பு
மவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி - 620 001.

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 28.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திருச்சி அவர்கள் சார்பு திரு.மொ.கண்ணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், முசிறி அவர்கள் இவ்வாணையத்தில் 13.04.2026-ல் நேரில் ஆஜராகி, மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 02.03.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்குகளில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பாக, 28.01.2026 தேதியிட்ட உத்தரவில், ***மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சி அவர்கள்****, இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள அ/மி.ஜெம்புகேஸ்வரம், அகிலாண்டேஸ்வரி திருக்கோயில், திருச்சிராப்பள்ளி தொடர்பாக மனுதாரரால் அளிக்கப்பட்ட மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து தனது அறிக்கையினை இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கவும், மேலும், மனுதாரர் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை,*

*மனுதாரருக்கு தகவலாக வழங்கி அதுகுறித்த அறிக்கையினை இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

3. அதன்படி, 02.03.2026 தேதியிட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான கோப்பு மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை மற்றும தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது எனவும், விசாரணை முடிவுற்று அவணங்களின் அடிப்படையில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம், மேல்முறையீட்டு அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 02.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

4. எனவே, இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பான கோப்பின் மீது, சட்டத்திற்குட்பட்டு மேற்கொள்ளப்பட்ட இறுதி நடவடிக்கை குறித்த தகவல்களை, பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), திருச்சி அவர்கள் வாயிலாக மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான அறிக்கையினை 10.06.2026-க்குள் இவ்வாணையத்திற்கு முகவரியிட பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), திருச்சி அவர்களுக்கு உத்தரவிட்டு, **இவ்வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 8512/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி - 620 001.

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்),
மவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி - 620 001.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.A.சிக்கந்தர் பாஷா,
2/2, சுக்ரா பிளாட்ஸ், A பிளாக், கீழ்தளம்,
சீனிவாசா நகர் 5-வது தெரு,
திருவானைக்காவல், திருச்சி - 620 005.

Copy to: File MP/PA,